DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 1035/2025

Prosecution PW 1

Deposition of Witness for Defence

Court

Name : நடராஜ்

Father's Name : சுப்பிரமணி

Village :

Taluk :

District :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 07.02.2026.

**எதிரி நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் அரசு காலனியில் குடியிருந்துகொண்டு, மருந்து விற்பனையாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.09.2025 அன்று மாலை 05.45 மணியளவில் கரூர், செங்குந்தபுரத்திலுள்ள ராயல் ஆப்டிகல்ஸ் உள்ள சந்தில் எனது TN 47 AQ 4216 SPLENDOR PLUS என்ற இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு, நானும் எனது நண்பரும் அரவக்குறிச்சி சென்றுவிட்டு, மீண்டும் 08.30 – 08.45

மணியளவில் திரும்பி வந்து பார்த்தபோது வண்டி காணாமல் போயிருந்தது. பின்னர், நானும் எனது நண்பரும் சேர்ந்து வண்டியை தேடிப் பார்த்தோம். ஆனால் கிடைக்கவில்லை. இரவு நேரம் ஆகிவிட்டதால் அடுத்த நாள் காலை 06.00 மணியளவில் கரூர் நகர காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அன்றைய தினம் 11.30 மணியளவில் எனது இருசக்கர வாகனத்தை கண்டுபிடித்துவிட்டதாக போலிசார் காவல் நிலையம் வரச் சொன்னார்கள். அங்கே நிறுத்தியிருந்த எனது வண்டியை அடையாளம் காட்டச் சொன்னார்கள். நான் அடையாளம் காட்டினேன். என்னிடம் காட்டப்படும் போட்டோவிலுள்ள வாகனம்தான் என்னுடையதுதான். **அந்த புகைப்படம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எனது இருசக்கர வாகனத்தை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து இடைக்கால பொ'றுப்பில் பெற்றுகொண்டேன். எனது இருசக்கர வாகனத்தை திருடிய நபர் என்று காவல் நிலையத்திலிருந்த நபரை காட்டி போலிசார் சொன்னார்கள். ஆஜர் எதிரிதான் அந்த நபர் ஆவார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

நான் மருந்து விற்பனையாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் வேலை செய்யும் வேலை எங்கு உள்ளது என்றால் மார்க்கெட்டிங் வேலை செய்வதால் மருந்துகள் அனைத்தும் எனது வீட்டிற்கே வந்துவிடும், அலுவலகம் எதுவும் எனக்கில்லை. TN 47 AQ 4216 SPLENDOR PLUS என்ற இருசக்கர வாகனத்தின் ஆர்.சி. புத்தகம் எனது பெயரில் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி இருசக்கர வாகனம் திருடுபோனபோது அதற்கு இன்சூரன்ஸ் இருந்ததா என்றால் இல்லை. 11.09.2025 அன்று எனது வாகனம் காணாமல் போனது. 12.09.2025 அன்று காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். புகார் மனுவை நான்தான் எழுதினேன். 11.09.2025 அன்று மாலை 05.45 மணியளவில் எனது வாகனத்தை நிறுத்திவிட்டு சென்றேன். நான் வாகனத்தை நிறுத்திய இடமானது பொதுவான

சாலை என்றால் சரிதான். அருகில் எனது நண்பரின் அலுவகம் உள்ளது. சம்பவ இடத்தில் பக்கத்தில் உள்ள கட்டடிடங்களில் சிசிடிவி கேமரா இருந்ததா என்றால் இருந்தது. எனது வாகனத்தை திருடியதை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது காணாமல் போன வாகனத்தை பல இடங்களில் தேடி பார்த்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனது வாகனம் காணாமல் போன விவரத்தை இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கோ, ஆர்.டி.ஓ. அலுவலகத்திற்கோ தகவல் தெரிவித்தேனா என்றால் இல்லை. காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். எதிரியை கைது செய்யும் போதும், வாகனத்தை கைப்பற்றியபோதும் நான் அங்கில்லை என்றால் சரிதான். போலிசார் அடையாளம் காட்டியதால்தான் எதிரியை எனக்கு தெரியும் என்றால் சரிதான். அதற்கு முன்னதாக எதிரியை எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரி எனது வாகனத்தை வைத்திருந்ததையோ, ஓட்டியதையோ நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். இவர்தான் எதிரி என்பதற்கு போலிசார் அடையாளம் காட்டியதைத் தவிர வேறு ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. எதிரி எனது வாகனத்தை திருடவில்லை என்றாலும், போலிசார் எதிரிமீது பொய்யாக வழக்கு போட்டுள்ளனர் என்றாலும் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./—எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 1035/2025

Prosecution PW 2

Deposition of Witness for Defence

Court

Name : முருகேசன்

Father's Name : கண்ணன்

Village :

Taluk :

District :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 07.02.2026.

**எதிரி நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார்.**
**முதல் விசாரணை**

நான் வெண்ணைமலையில் குடியிருந்துகொண்டு, டெக்சில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது நண்பர் ஆவார். கடந்த 11.09.2025 அன்று இரவு 08.30. – 08. 45 மணிக்கு அ.சா.1 எனக்கு போன் செய்து தனது இருசக்கர வாகனத்தை காணவில்லை என்றும், உடனடியாக எனது இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு தேடுவதற்காக வருமாறும் அழைத்தார். நான் சென்று அ.சா.1 உடன் சேர்ந்து அவரது இருசக்கர வாகனத்தை தேடிப்

பார்த்தோம், ஆனால் கிடைக்கவில்லை. ஆனால் நான் திரும்ப சென்றுவிட்டேன். மறுநாள் காலை அ.சா.1 காவல் நிலையம் சென்று புகார் கொடுத்ததாக கேள்விபட்டேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

அ.சா.1 எனது நண்பர் ஆவார். திருடுபோன வாகனம் எனது நண்பரின் பெயரில் உள்ளது. திருடுபோன வாகனத்தை எந்த தேதியில் எத்தனை மணிக்கு எங்கு நிறுத்தியிருந்தார் என்று தெரியுமா என்றால் 11.09.2025 அன்று ஆப்டிகல்ஸ் இருக்கும் சந்தில் நிறுத்தியிருந்ததாக 08.45 மணிக்கு போன் செய்து அ.சா.1 சொன்னார். அ.சா.1 வாகனத்தை நிறுத்தியபோது நான் அங்கு இருந்தேனா என்றால் இல்லை. யார் வாகனத்தை எடுத்துக் கொண்டு போனது என்பதை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். 11.09.2025 அன்று வாகனம் திருடுபோனது. வாகனம் காணாமல் போன விவரம் அ.சா.1 போன் செய்து சொன்னபோதுதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எப்போது எந்த தேதியில் போலிசார் என்னை விசாரித்தனர் என்று எனக்கு ஞாபகமில்லை. அ.சா.1 எனது நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஓம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 1035/2025

Prosecution PW 3

Deposition of Witness for Defence

Court

Name : ராஜ்குமார்

Father's Name : நல்ல பெருமாள்

Village :

Taluk :

District :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 07.02.2026.

**எதிரி நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார்.**
**முதல் விசாரணை**

நான் கே. வேலாயுதம்பாளையத்தில் குடியிருந்துகொண்டு, கெமிக்கல் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது உறவினர் ஆவார். கடந்த 11.09.2025 அன்று இரவு 08.30. – 08. 45 மணிக்கு அ.சா.1 எனக்கு போன் செய்து செங்குந்தபுரம், ராயல் ஆப்டிகல்ஸ் அருகில் நிறுத்தியிருந்த தனது இருசக்கர வாகனத்தை காணவில்லை என்று சொல்லி அழுதார். நான் அவருக்கு ஆறுதல் சொன்னேன். மறுநாள் காலை அ.சா.1 ம், நானும் கரூர் நகர

காவல் நிலையத்திற்கு புகார் அளிக்க சென்றோம். பிறகு அன்றைய தினம் இரவு இருசக்கர வாகனம் கிடைத்துவிட்டதாக போலிசார் அழைத்தன்பேரில் காவல் நிலையம் சென்று தனது இருசக்கர வாகனத்தை அடையாளம் காட்டியதாக அ.சா.1 என்னிடம் சொன்னார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

அ.சா.1 எனது மருமகன் ஆவார். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். 11.09.2025 அன்று இரவு 08.45 மணிக்கு வாகனம் திருடுபோனதாக அ.சா.1 என்னிடம் சொன்னார். அ.சா.1 உடன் புகார் கொடுக்க நான் சென்றேன். 12.09.2025 அன்று காலை 06.00 மணிக்கு போலிசார் என்னை விசாரித்தனர். போலிசார் விசாரணையில் சொன்ன சங்கதிகள் அனைத்தும் அ.சா.1 சொல்லியதைத்தான் நான் சொன்னேன் என்றால் சரிதான். எதிரியை கைது செய்யும்போதும், வாகனத்தை கைப்பற்றியபோது நான் அங்கில்லை என்றால் சரிதான். அ.சா.1 எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 1035/2025

Prosecution PW 4

Deposition of Witness for Defence

Court

Name : பழனிச்சாமி

Father's Name : ரெங்கசாமி

Village :

Taluk :

District :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 07.02.2026.

**எதிரி நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார்.**
**முதல் விசாரணை**

நான் கரூர், ஆண்டாங்கோவிலில் குடியிருந்துகொண்டு, விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 12.09.2025 அன்று காலை 09.00 மணியளவில் கரூர், ராயல் ஆப்டிகல்ஸ் அருகிலுள்ள டீக்கடையில் நானும், வையாபுரி என்பவரும் டீ குடித்துக் கொண்டிருந்தோம். அப்போது கரூர் நகர போலிசார் அங்கு வந்து இருசக்கர வாகனம் திருடு போனது சம்மந்தமாக விசாரித்து மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தார்கள். என்னையும்,

வையாபுரியையும் அவர்கள் தயார் செய்யும் பார்வை மகசரில் சாட்சியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். நாங்கள் அதற்கு ஒப்புக்கொண்டோம். எங்கள் முன்னிலையில் பார்வை மகசர் தயார் செய்து மாதிரி வரைபடம் வரைந்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **பார்வை மகசர் அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

அ.சா.1 நடராஜை எனக்கு தெரியாது. போலிசார் கேட்டுக்கொண்டதற்கினங்க போலிசார் தயார் செய்த தாளில் 12.09.2025 அன்று காலை 09.00 மணிக்கு கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று நான் படித்து பார்த்தேன். அதில் சம்பவம் பற்றி இருந்தது. என்னுடன் வையாபுரி என்பவர் கையொப்பம் செய்தார். என்னுடன் கையொப்பம் செய்தவரை எப்படி தெரியும் என்றால் எனது நண்பர் ஆவார். காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./–எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**